sky தமிழ் NEWS

# துணிந்தெழு

வரலாறு படைக்க இருக்கும் வைர மங்கையர்

skytamil.lk@gmail.com
www.news.skymediasl.com

JANUARY 30,2021 SATURDAY வார இதழ் @skytamil.lk




துணிந்தெழு கவிதைகள் 03



## மின்னும் தாரகையைத் தந்த கலாபூசணம் நூருல் அயின் நஜ்முல் ஹுசைன்


BROOK
CAR WASH
* Hygienic washing
* Best Complements
• Tissue Box
• Water Bottle
• Perfume
* Plastic Covers For Carpet,
Gear Boxes & more...
QAR
30
only
24hr
SERVICE
EVERYDAY
Call us
30300393
Brook Car Washing & Polishing

# ராணியின் ரகசியம்!



ஒரு நாட்டை 68 ஆண்டுகளைத் தாண்டியும் ஒரு பெண்ணால் ஆள முடியும் என்று நிரூபித்திருக்கிறார் சிங்கப்பெண் இங்கிலாந்து ராணி எலிசபெத். இவருக்கு தற்போது 94 வயதாகிறது ஆனாலும் நடை, உடை பாவனையில் சற்றும் அவரது கம்பீரம் குறையவில்லை.
10 வயதில் குதிரையேற்றம் பயின்ற எலிசபெத், இங்கிலாந்தின் குதிரைப் படையிலும் பணியாற்றியுள்ளார். இப்போதும் குதிரை சவாரி செய்கிறார். 1947-இல் இளவரசர் பிலிப்பை மணந்து கொண்டார்.

ராணி எலிசபெத்தின் 68 ஆண்டுகால ஆட்சியில் அன்றைய வின்ஸ்டன் சர்ச்சில் முதல் இன்றைய போரிஸ் ஜான்சன் வரை 15 பிரிட்டன் பிரதமர்களைக் கண்டுள்ளார். இவருக்கு உலகளவில் 23 மெழுகுச்சிலைகள் அமைக்கப்பட்டுள்ளன.
எலிசபெத் ராணி இந்தியாவுக்கு மூன்று முறை வந்திருக்கிறார். கடைசியாக 1997 -இல் வந்துள்ளார்.

## ராணி இப்போதும் ஆரோக்கியமாகவும் சுறுசுறுப்பாகவும் இருப்பதன் ரகசியம் என்ன?

தினந்தோறும் உடற்பயிற்சி செய்வது.

தகுந்த எடையைப் பராமரிப்பது.

சத்தான சமச்சீர் உணவுகளை உட்கொள்வது.

குடும்பத்தினர், நண்பர்கள் மற்றும் மக்களோடு தொடர்பில் இருப்பது.

சமூகப் பணிகளில் ஈடுபடுவது.

முறையான மருத்துவ பரிசோதனைகள் மேற்கொள்வது.

# துணிந்தெழு கவிதைகள்

## உடைபடும் தடைகள்-என் உழைப்பின் விடையாய்

நான்
அந்த இருண்ட நாட்களுக்குப் பிறகு வாழவே
விரும்பவில்லை..
பெரியதொரு புயலுக்குப் பின் குலைந்து போன
கிராமம் போல்..

நானும் நிலை குலைந்தது நிஜம் தான்..
கிளை உடைத்து வளர்க்கும் முருங்கை மரமாய்
நான் இருக்க விரும்பவில்லை.. வெட்டப்பட்ட
காயத்திற்கும் உடைக்கப்பட்ட தடத்திற்கும் மருந்து
போடவும் எனக்கு மனமில்லை..

வாழ்கையின் முதுகெலும்பு உடைந்ததால்..
மரணம் எனும் பளு எலும்பை நோக்கிப்
பயணப்படுகிறேன்

இந்தப்பூமி எனக்கு உண்மையாய் இல்லை என்று
உணர்ந்த நான் பூமிக்கடியில் உண்மை பிறக்கும்
என்றா சந்தேகிக்கிறேன்..

சமூகத்தின் சொற் சன்னங்கள் நெஞ்சு துளைக்கும்
போது.. சவமானால் ஏதும் சாதித்து விடலாம்
என்று.. எனது மனங்களா? பிரச்சாரம் செய்தன..

போலிக்கும் நிஜத்திற்கும் இடையில் உள்ள
மாயமே வாழ்க்கை என்பதை நான் அறிய
வேண்டும்..

கறையோடு போகும் நதி கடலோடு சேரும்போது
சுத்தமாகிறது.. அது போல
அழுக்காய்ப் போன எனது பயணத்தின்
முடிவிலும்.. நானே இளவரசி ஆவேன் காரணம்
என்னை சூழும் தடைகளை விட என்
தன்னம்பிக்கை பெரியது



கவிப்புயல் ஸஹ்ரா
மாத்தளை ஆமினா தேசிய பாடசாலை

## இங்குதான் நிற்கின்றோம்



எனது கைகள் எவர் முன்னும்
கட்டிக் கொள்வதற்கு இல்லை..
எனது கால்கள் எவர் முன்னும்
மண்டி இடுவதற்கும் இல்லை..
நிமிர்ந்த முதுகும்
தெளிந்த பார்வையும்
தெறித்தோட வைக்கும்
இந்த மூடர் கூட்டத்தை..

முடங்கிக் கிடக்க நாம்
உன் வீட்டு துடைப்பக்
கட்டையும் இல்லை,
அடிகளை வாங்க நாங்கள்
அடுப்பங்கரை உரலும் இல்லை,
புரளு ம் நாவில் பரவும்
எதையும் உமிழும்
உமக்கு மகத்துவம் தெரியுமா
பெண்மையின் தைரியம் புரியுமா?

வேதங்களை சாதகமாய்
செய்து
மாதர் தமை முடக்கிடலாமோ..
பார்தனிலே சம உரிமை
படைத்ததுவும்
நம் திருமறை அல்லவோ..
நடை முறையில் நல் வழியில்
நடக்காத வீணர்கள் எல்லாம்
நன்மாராய போதனையில்
நாடெல்லாம் நாடோடியாய்..

போதும் உங்கள் அடக்குமுறை..
பேடிகள் போல் பதுங்கி தாக்காமல்
மோதி விட துணிவிருந்தால்
மோத வாருங்கள் ,
பாதியிலே ஓடி விடாமல்..
நாங்கள் இங்குதான் நிற்கின்றோம்
எமக்கான வரைமுறை காவலுடன்!



அரச கலைச்சுடர் விருது வென்ற
பாத்திமா ஷிமாறா

# "மின்னும் தாரகை"யைத் தந்த கலாபூசணம் நூருல் அயின் நஜ்முல் ஹுசைன்

**இலங்கை முஸ்லிம் பெண் எழுத்தாளர்கள்** யார் யார் என ஆய்வு செய்து ஆரம்ப முதல் இன்று வரை இலக்கிய பங்களிப்பு செய்து வரும் முஸ்லிம் பெண் எழுத்தாளர்களை அடையாளப் படுத்தி " மின்னும் தாரகைகள் " எனும் இலங்கை முஸ்லிம் பெண் எழுத்தாளர்கள் பற்றிய ஆய்வு நூல் ஒன்றை சிரேஸ்ட ஊடகவியலாளரும் அரசாங்க தகவல் திணைக்கள அதிகாரியுமான கலாபூசணம் நூருல் அயின் நஜ்முல் ஹுசைன் 2018 ஆண்டு நவம்பர் மாதம் 11ஆம் திகதியன்று வெளியிட்டு இலங்கை முஸ்லிம் இலக்கிய வரலாற்றில் ஒரு புதிய அத்தியாயத்தை ஆரம்பித்து வைத்தார்.

அந்த நூலின் உள்ளடக்கம் இன்று கல்விமான்களின், அறிஞர்களின், இலக்கியவாதிகளின் பேசு பொருளாக உள்ளது அவர்களின் பெரும் பாராட்டுகளைப் பெற்றுள்ளது.இலங்கை முஸ்லிம் இலக்கிய வரலாற்றில் வெளிவந்த முதலாவது ஆய்வு நூலாகவும் இந்த நூல் பல்கலைக்கழக பேராசிரியர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இவ்வாறான ஓர் அரிய முயற்சி நடைபெற்றிருந்தது இலங்கை இலக்கிய வரலாற்றில் இதுவே முதல் தடவை எனலாம். இலங்கை பெண் எழுத்தாளர்களை ஒருசேர அறிந்து கொள்ளும் வாய்ப்பை நூலாசிரியர் ஏற்படுத்தித் தந்துள்ளார்.






இந்த நூலாசிரியர் கலாபூசணம் நஜ்முல் ஹுசைன் 1975 ஆம் ஆண்டு முதல் "செல்வி ரஷீத் நூருல் அயின்" என்ற பெயரோடு எழுத்துக்கு அறிமுகமானவர். பின்னர் இலங்கையில் ஜனரஞ்சக பத்திரிகை களான ஊடகத்துறை ஜாம்பவான் எஸ். டி. சிவநாயகம் அவர்களின் தலைமையில் இயங்கிய " தினபதி ", " சிந்தாமணி " பத்திரிகைகளின் ஆசிரியர் பீடத்தில் 1980 ல் பத்திரிகையாளராக இணைந்து 1990ஆம் ஆண்டு அந்த நிறுவனம் மூடப்படும் வரை சுமார் பத்தாண்டு காலம் பணிபுரிந்தார்.

மலையகத்தைச் சேர்ந்த உடுதெனிய என்ற சிற்றூரே இவர் பிறந்த கிராமமாகும். காலஞ்சென்ற அல்ஹாஜ் எம்.எம். ரஷீத், அல்ஹாஜா உம்மு ஸல்மா ரஷீத் தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரியான இவர் உடுதெனிய முஸ்லிம் மகா வித்தியாலயம், மடவளை மதீனா தேசிய கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவியாவார்.

கொழும்பு திறந்த பல்கலைக் கழகத்தில் பொதுசனத் தொடர்புத்துறை சான்றிதழும், தொலைக்கல்வி நிறுவனத்தின் பொதுசனத்துறை டிப்ளோமா பட்டமும், கொழும்பு பல்கலைக்கழகத்தில் பத்திரிகைத்துறை டிப்ளோமா பட்டமும் பெற்றுள்ளார். கணினித் துறையிலும் பல பயிற்சிகளைப் பெற்றவர்.





1975ஆம் ஆண்டு இலங்கை வானொலி தமிழ் சேவையில் ஒலிபரப்பாகிய பூவும் பொட்டும் மங்கையர் மஞ்சரி என்ற நிகழ்ச்சி மூலம் எழுத்துலகில் பிரவேசித்த இவர் "ரஷீத் நூருல் அயின்", "உடுதெனிச்செல்வி", "பின்த் ரஷீத்", "பின்த் ஸல்மா", "கண்ணொளி" ஆகிய புனைப்பெயர்களில் எழுதியுள்ளார்.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன முஸ்லிம் சேவையில் மாதர் மஜ்லிஸ் பிரதி தயாரிப்பாளராக பல ஆண்டு காலமாக எழுதியும் குரல் கொடுத்தும் வந்த இவர் வானொலி சிறப்புக் கவியரங்குங்களிலும், தொலைக்காட்சி நிகழ்ச்சிகளிலும் அவ்வப்போது பங்கு பற்றி வருகிறார்.

திருமதி நூருல் அயின் நஜ்முல் ஹுசைன் "ஜனனி" என்ற பத்திரிகையில் உதவி ஆசிரியராக இருந்தும் முக்கிய பல கலை இலக்கியவாதிகளை நேர்காணல் செய்துள்ளார். அத்தோடு அப்பத்திரிகையில் "அறிவையர் அரங்கம்" என்ற மாதர் பகுதியையும் பல வருட காலமாக நெறிப்படுத்தி வந்தார். அரசாங்க தகவல் திணைக்களத்தின் பிரசார அதிகாரியாக நியமனம் பெற்ற இவர் அத்திணைக்களத்தின் "திங்கள்" என்ற மாதாந்த சஞ்சிகையின் இணை ஆசிரியராகவும் திகழ்ந்தார்.

அத்திணைக்கள மாதாந்த "புத்தொளி"என்ற பத்திரிகையின் பிரதம ஆசிரியராகவும் செயல்பட்டுள்ளார். திணைக்களத்தினால் சுமார் 40 வருடகாலமாக தொடர்ச்சியாக வெளிவரும் "தெசதிய" என்ற சிங்கள சஞ்சிகையின் சிறப்புக் கட்டுரையாசிரியையாகவும் கடமை புரிந்தார். . இச்சஞ்சிகையில் இவரால் எழுதப்பட்ட அரசியல் தலைவர்களின் தொடர் நேர்காணல் வாசகர் மத்தியில் பெரும் வரவேற்பை பெற்றிருந்தன. இந்த நேர்காணல் தொடருக்காக அரச கரும மொழித்திணைக்களம் இவருக்கு "இன ஐக்கியத்துக்கான ஊடக பங்களிப்பு" என்ற அடிப்படையில் விருதும் பொற்கிழியும் வழங்கி கௌரவித்தது.







இவரது ஒரே மகள் நூருஸ் ஷப்னா சிராஜுதீன் ஒரு சட்டத்தரணி ஆவார்.நூருஸ் ஷப்னாவும் வளர்ந்து வரும் ஒரு இளம் கவிதாயினி தான்.இலங்கை சட்டக்கல்லூரி இந்து. மகா சபையினால் நடத்தப்பட்ட கவிதைப் போட்டி யில் இவர் கவிதைக்காக தங்கப்பதக்கம் பெற்றுள்ளார்.வானொலி , தொலைக்காட்சி கவியரங்குகளிலும் பங்கு பற்றியுள்ளார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தின் கொழும்பு மாவட்ட தகவல் அதிகாரியாக (District Information Officer) பதவி உயர்வு பெற்ற இவர் கொழும்பு மாவட்ட செயலக தகவல் பிரிவுக்குப் பொறுப்பதிகாரியாகவும் சுமார் பத்தாண்டு காலம் கடமை புரிந்தார்.

இக்கால பகுதியில் (2007ம் ஆண்டு முதல் ) "கொழும்ப புவத்" (கொழும்புச் செய்திகள்) என்ற பெயரில் சிங்கள மொழி மூல காலாண்டு பத்திரிகை ஒன்றை வெளியிட்டார். கொழும்பு மாவட்டத்தில் அரசாங்கத்தால் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி நடவடிக்கைகள் மற்றும் கலை, கலாசார நிகழ்வுகளை உள்ளடக்கியதாக வெளிவந்த இப்பத்திரிகையின் பிரதம ஆசிரியையாக இருந்து தொடர்ச்சியாக பல இதழ்களை வெளியிட்டார். உயர் அதிகாரிகளினால் மட்டுமன்றி அன்றைய பொதுநிர்வாக அமைச்சரினால் கூட இப்பத்திரிகை பாராட்டப்பட்டது.

அதைத் தொடர்ந்து தகவல் திணைக்களத்தின் உத்தியோகப்பூர்வ செய்தி இணையத்தளமான www.news.lk என்ற இணையத்தளத்தின் தமிழ்ப் பிரிவில் தகவல் அதிகாரியாக (Information Officer) கடமையாற்றினார். அகில இலங்கை சமாதான நீதவானாகவும், கொழும்பு உயர் நீதிமன்ற ஜூரர் சபை உறுப்பினராகவும் இருக்கும் இவர் நீதி அமைச்சின் அங்கீகரிக்கப்பட்ட அரச மொழிப்பெயர்ப்பாளருமாவார்.

“ஒளி அரசி“ என்ற மாதாந்த மாதர் சஞ்சிகையின் ஆசிரியர் பீட ஆலோசகராகவும் அதன் சிரேஷ்ட எழுத்தாளராகவும் திகழ்ந்திருக்கிறார். இலங்கை ஊடகத்துறைத்துறை வரலாற்றில் பத்திரிகைத்துறையையே தனது முதல் தொழிலாக தேர்ந்தெடுத்து அத்துறையிலேயே கால் பதித்து பத்திரிகைத்துறையில் வெள்ளி விழாவைக் கடந்து பொன்விழாவை நோக்கி நகரும் இவர், மிக நீண்ட காலமாக தொடர்ச்சியாக பணியாற்றிய ஒரேயொரு சிரேஷ்ட முஸ்லிம் பெண் ஊடகவியலாளர் என்ற பெருமைக்குரியவர். அவ்வாறே அரசாங்க தகவல் திணைக்களத்தில் முஸ்லிம் பெண் தகவல் அதிகாரியாக சுமார் இருபது வருட காலம் சேவையாற்றிய ஒரேயோரு முஸ்லிம் பெண் தகவல் அதிகாரியாகவும் இவர் திகழ்கிறார்.

இவரது முதலாவது நூல் “பண்பாடும் பெண்“ என்பதாகும். அதனையடுத்து ”மின்னும் தாரகைகள்” என்ற ஆய்வு நூலை வெளியிட்டார்.”பூச்செண்டு” என்பது இவரது கவிதை தொகுதி நூலாகும். அவ்வாறே பல்கலைக்கழக பத்திரிகைத்துறை டிப்ளோமா பாடநெறிக்காக சமர்ப்பித்த ஆய்வுக் கட்டுரையான “எய்ட்ஸ் நோயும் பெண்களும்“ உலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாட்டுக்காக எழுதப்பட்ட “இலங்கை முஸ்லிம் பெண்களின் ஊடகப் பங்களிப்பு“ என்ற இவரது ஆய்வுக் கட்டுரை என்பனவும் நூலுரு பெற உள்ளன.



2009ம் ஆண்டு மகளிர் விவகார அமைச்சின் சர்வதேச மகளிர் தின கௌரவம் இலங்கையின் அப்போதைய முதற் பெண்மணி ஷிரந்தி ராஜபக்ஷவினால் வழங்கப்பட்டது

## இலக்கியத்துறை ஊடகத்துறை பங்களிப்புக்காக இவருக்குக்
# கிடைத்த விருதுகள் பட்டங்கள்

2006ஆம் ஆண்டு கலாசார அமைச்சினால் கலாபூஷணம் அரச விருது

2009ம் ஆண்டு மகளிர் விவகார அமைச்சின் சர்வதேச மகளிர் தின கௌரவம் இலங்கையின் அப்போதைய முதற் பெண்மணி ஷிரந்தி ராஜபக்ஷவினால் வழங்கப்பட்டது

அகில இன நல்லுறவு ஒன்றியத்தால் “இலக்கியத் தாரகை “தகவல் ஜோதி“

முஸ்லிம் கலைஞர் முன்னணியினால் “ஊடகத் தாரகை“

மலையக கலை கலாசாரப் பேரவையினால் இரத்னதீபம் விருது
அகில உலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாட்டில் , படைப்பாளர் விருது

சோனக இஸ்லாமிய கலாசார நிலையத்தினால் மாக்கான் மாக்கார் விருது

மத்திய மாகாண கல்வி அமைச்சினால் சிறந்த எழுத்தாளர் விருது

கொழும்பு கலை வட்டத்தினால் மகளிர் தின விருது

சாய்ந்தமருது தடாகம், சிந்தனை வட்டத்தினால் சிறப்பு விருது

இலங்கை சமுர்த்தி அதிகார சபையினால் சிறப்பு விருது

இளம் மாதர் முஸ்லிம் சங்கத்தின் மகளிர் தின சேவை நல விருது

மலர் எப் எம். வானொலியினால் மகளிர் தின விருது

கலைநிலா உவைஸ் ஷெரீபின் விழாவின் போது கௌரவம்

ஈழத்து இசை முரசு கலைக்கமலின் கீத் ராத் நிகழ்ச்சியில் கௌரவம்

கண்டி பதியுத்தீன் மஹ்மூத் மகளிர் கல்லூரி தமிழ் தின விழாவின் போது கௌரவ விருது

கிருஷ்ண கலாலயத்தினால் கௌரவ விருது

டென்மார்க் சிவமீரா அறக்கட்டளை நிறுவனமும் தமிழ்நாடு வளரி சஞ்சிகையும் இணைந்து நடத்திய சர்வதேச கவிதைப்போட்டியில் முதலாம் இடம்

சிவமீரா ஞாபகர்த்த விருதும் பொற்கிழியும் இவ்வாறு பல்வேறு விருதுகளுக்குச் சொந்தக்காரியான இந்த நூலாசிரியர் நூருல் அயின் பல வெளிநாடுகளுக்கும் கலைப்பயணம் செய்துள்ளார். மலேசியாவின் தலைநகரான கோலாலம்பூரில் நடைபெற்ற உலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாடு தாய்லாந்தின தலைநகரான பெங்கொக், இந்தியா, சவுதி அரேபியா ஆகிய நாடுகளுக்கும் இவர் விஜயம் செய்துள்ளார். இந்தியாவில் பனையூரில் கவிக்கோ அப்துல் ரகுமான் அவர்களை அன்னாரின் இல்லத்திலேயே சந்தித்துரையாடியமை தனது இலக்கிய வாழ்வில் மறக்க முடியாத சம்பவம் எனவும் குறிப்பிடுகிறார். சதா எழுத்துக்களோடு கைகோர்த்திருக்கும் இந்தச் சகோதரி தனது அலுவலக வேலைகள் குடும்ப வேலைகள் எல்லாவற்றுக்கும் மத்தியில் சமூக சேவைகளிலும் தன்னை முழுமையாக ஈடுபட்டு செயல்படுவது இவரது மனித நேயத்துக்கு மற்றுமொரு சான்றாகும். ஆரம்ப காலத்தில் முஸ்லிம் மீடியா போரம், இலங்கை பத்திரிகையாளர் சங்கம் ஆகியவற்றின் செயற்குழு உறுப்பினராக செயல்பட்ட இவர் தற்சமயம் இளம் மாதர்களின் முஸ்லிம் சங்கத்தின் ஊடக இணைப்பாளராகவும் உப தலைவியாகவுமிருந்து தனது சமூக சேவைகளையும் செய்து வருகிறார். அருள்வாக்கி அப்துல் காதர் பிறந்த மண்ணை தனது தாய்வீடாகக் கொண்ட இவரது குடும்பமே கலைக்குடும்பம் தான்.


இவரது கணவரும் ஒரு இலக்கியவாதியே..என். நஜ்முல் ஹுசைன் நாடறிந்த நற்கவிஞர். வலம்புரி கவிதா வட்டத்தின் தலைவர். இலக்கியத்தில் ஈடுபாடு கொண்ட இவர் பனித்தீ - இனிவரும் நாட்களெல்லாம் ... நஜ்முல் ஹுசைனின் நட்சத்திரக்கவிதைகள் என மூன்று கவிதை நூல்களை வெளியிட்டுள்ளார். எனவே இவரை ஒரு இலக்கிய குடும்பம் என்று கூறுவது மட்டுமல்ல இவர்கள் “இலக்கியத்தம்பதிகள் “ என்றும் கூறலாம். இவரது ஒரே மகள் நூருஸ் ஷப்னா சிராஜுதீன் ஒரு சட்டத்தரணி ஆவார். இலங்கை சட்ட உதவி ஆணைக்குழுவில் சட்ட அதிகாரியாக பணிபுரிந்து வருகிறார்.

நூருல் அயின் நஜ்முல் ஹுசைன இலங்கை முஸ்லிம் பெண் எழுத்தாளர்கள் பற்றி எழுதிய "மின்னும் தாரகைகள்" என்ற ஆய்வு நூலை "திதுலன நாயகா " என்ற பெயரில் சிங்கள மொழியிலும் வெளியிடுவதற்கான சகல ஏற்பாடுகளையும் பூர்த்தி செய்துள்ளார். சர்வதேச மகளிர் தினமாகிய மார்ச் மாதம் 8 ஆம் திகதி அன்றே இந்த நூலை வெளியிட திட்டமிட்டிருந்தார். கொரோனா அச்சுறுத்தல் காரணமாக குறித்த தினத்தில் வெளியிட முடியாது போனால் நிலைமை சீரடைந்ததும் சிங்கள நூலின் வெளியீட்டு விழா வெகு சிறப்பாக நடைபெறும் என நூலாசிரியர் நூருல் அயின் நம்பிக்கை தெரிவித்தார்.

"மின்னும் தாரகைகள் " நூல் வெளியிடப்பட்ட பின்னர் நூல்களை வெளியிட்ட சுமார் 25 நூலாசிரியர்கள் தனது சிங்கள நூலில் புதிதாக உள்வாங்கப்பட்டிருப்பதாகவும் , 88 வயது மூத்த இலக்கிய வாலியின் தகவல்களுடன் ஆரம்பமாகும் இந்த நூல் ஆங்கிலத்தில் கவிதை நூலை வெளியிட்ட 8 வயது சிறுமியின் தகவலுடன் நிறைவு பெறுவதும் தனது சிங்கள நூலின் சிறப்பம்சமாகும் என் குறிப்பிடுகிறார் நூலாசிரியர் நூருல் அயின்.

இலங்கை முஸ்லிம் பெண் எழுத்தாளர்களை சிங்கள இலக்கிய உலகுக்கும் அறிமுகப்படுத்துவதும் அதன் மூலம் எழுத்தாளர்களிடையே ஓர் உறவும் பாலம் இடும் நடவடிக்கையாகவும் நாம் இதனைக் காணலாம்.

## ஊடக நாயகியாக ஏற்கனவே பட்டம் பெற்றுள்ள இவர் இன்று ஒரு சாதனை நாயகியாகவும் ஜொலிக்கிறார்.




"மின்னும் தாரகைகள்" என்ற ஆய்வு நூலை
**"திதுலன தாரக்கா"**
**என்ற பெயரில் சிங்கள மொழி நூல்**
விரைவில் வெளிவரவுள்ளது


இலக்கிய உலகிலே மின்னிக்கொண்டிருக்கும் தாரகைகளான எமது இலங்கை முஸ்லிம் பெண் எழுத்தாளர்கள் பற்றிய ஒரு ஆய்வினை மேற்கொண்டு அதில் இந்த நூருல் அயின் வெற்றியும் கண்டுள்ளார் .இவரது "மின்னும் தாரகைகள்" என்ற இலங்கை முஸ்லிம் பெண் எழுத்தாளர்கள் பற்றிய இந்த ஆய்வு நூலை www.noolaham.org என்ற இணைய வழி ஊடாகவும் பார்க்க முடியும்.

உண்மையிலேயே நம் ஒவ்வொருவர் வீடுகளிலிலும் இருக்க வேண்டிய கை நூலாகும் இது பல்கலைக்கழக மாணவர்களின் ஆய்வு நடவடிக்கைகளுக்கும் ஒரு உசாத்துணை நூலாக மிளிரும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. எந்த ஒரு அமைச்சினதும் எந்த ஒரு நிறுவனத்தினதும் அமைப்பினதும் எவ்வித ஒத்துழைப்புமின்றி ஒரு தனி மனித முயற்சியாக தனது கணவரின் உதவியுடன் இந்த ஆவண நூலை வெளியிட்டிருப்பது உண்மையிலேயே பாராட்டப்பட வேண்டிய விடயம்தான். இந்நூலை வெளியிடுவதற்கு இவர் பட்ட கஷ்டங்கள் துன்பங்கள் கொஞ்சநஞ்சமல்ல.

நூல்களை இலக்கிய உலகிற்கு பரிசாக தரும் இந்த நூலாசிரியை நூருல் அயின் நஜ்முல் ஹுசைனின் இந்த பெரும் முயற்சியை பாராட்டுவதுடன் அவர் நோய் நொடிகளின்றி நூறாண்டு காலம் வாழ்ந்து மேலும் நூல்கள் பல தந்து இலக்கிய இதயங்களை வெல்ல வேண்டும் எனவும் ஓயாது எழுதிக்கொண்டிருக்கும் இவரது பேனா ஓய்வு பெறாமல் தொடர்ந்தும் எழுதிக்கொண்டே இருக்க வேண்டும் எனவும் நாமும் அவரை வாழ்த்திடுவோம்..













# சில அடையாள புகைப்படங்கள்































( பல்துறை ஆளுமைமிக்க இலக்கிய படைப்பாளியான சகோதரி நூருல் அயின் நஜ்முல் ஹுசைன் அவர்களின் இலக்கிய பங்களிப்புகளை பாராட்டுமுகமாக இலங்கையின் பிரதான தொலைக்காட்சி நிறுவனங்களான வசந்தம் டிவி, சக்தி டிவி, யு டிவி , பிறை எப்.எம் என்பன இவரது சிறப்பு நேர்காணல் களை அண்மையில் நடாத்தி வருகின்றன.

இந்தியாவின் இஸ்லாமிய இலக்கிய கழகம் கூட
இவரை கௌரவித்தது இணைய வழியூடாக
(ZOOM) சிறப்பு சொற்பொழிவு ஒன்றையும் நடத்தியது எமது கட்டார் வானொலி இணைய வழி அலை வரிசை யில் கூட நாமும் அன்னாரை நேர்காணல் செய்தோம்..
இன்று எமது Sky தமிழ் இணைய வழி சஞ்சிகையின் அட்டைப்படத்தை அலங்கரிப்பதற்காகவும் நாம் இந்த ஆளுமையை தெரிவு செய்ததில் பெரு மகிழ்ச்சி அடைகிறோம்..)




# துணிந்தெழு இதழில் உங்கள் விளம்பரங்களைப் பரிசுரிக்க

## தொடர்புகளுக்கு

## +94 77 247 1464
## +94 76 709 6787
## +94 77 639 11 88



உங்கள் நிறுவனத்திற்கென
பேஸ்புக் பக்கம்
ஒன்றை வடிவமைத்து அதனூடாக
உங்கள் நிறுவனத்தின்
பொருட்கள் சேவைகளை
சந்தைப்படுத்த
விரும்புகின்றீர்களா?
Basith
Sky Graphics
#SKYGRAPHICS.LK
Sky Graphics
SINCE 2012
INQUIRED NOW
+9477 639 11 88




Center for Psychology & Counseling - Sri Lanka
1. Individual and family Counselling
2. Counselling for school Students
3. Psychological & Counseling Studies
4. Drug Addiction Counselling and family Counselling
5. Interventions and testing for all psychological problems
centerforcounseling
centerforcounseling123@gmail.com
For Appointments: 0761619184
Ampara District Srilanka